2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 230, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன், மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

230—

தொழிற்பயிற்சி நிலையம்

***8178—திரு. க.சொ.க. கண்ணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூரில் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு திரு. கண்ணன் அவர்கள், தங்கள் தொகுதியில் அரசு பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஜெயங்கொண்டம் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில் தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், முற்றிலும் விவசாயம் நிறைந்த, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய பகுதியாகும். இங்கு நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்*

பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் என்று 51 பள்ளிகள் இயங்கி வருகின்றன. பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இந்த அரசு, எவ்வித உயர் கல்வி நிறுவனங்களும் இல்லாத ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, தா. பழூரில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 6 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் அமைந்துள்ளன. அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 157 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 57 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தனியார் தொழிற்பயிற்சி நிலையத்தில் 111 இடங்களுக்கு 4 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு 107 இடங்கள் காலியாக உள்ளன. ஆகமொத்தம், தற்போது கூடுதலாக 207 இடங்கள் காலியாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜெயங்கொண்டம் தொகுதியைச் சார்ந்தவர். ஜெயங்கொண்டம் என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகும். நம்முடைய மன்னர் திரு. இராஜேந்திர சோழன் அவர்கள் வடபுலத்திற்கு சென்று, கங்கையை ஒட்டியிருக்கின்ற பல மன்னர்களைத் தோற்கடித்து அந்த வெற்றியின் சின்னமாகத்தான், அந்த ஜெயங்கொண்டம் தொகுதிக்கு ஜெயங்கொண்ட சோழபுரம் என்று பெயரிட்டான். அது மாத்திரம் அல்ல, கங்கையை ஒட்டியிருக்கின்ற பாலவம்ச மன்னர்களைத் தோற்கடித்து, வெற்றி பெற்றதன் நினைவாகத்தான், கங்கையை நினைவாகக் கொண்டு, கங்கைகொண்ட சோழபுரம் என்று பெரிய கோயிலை உருவாக்கி, தற்போது அது நினைவுச் சின்னமாக இன்றைக்கும் வரலாற்றை உணர்த்திக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட ஜெயங்கொண்டம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்த கோரிக்கையைக் கேட்கின்ற காரணத்தினால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். அருகில் சங்கர் சிமெண்ட், ராம்கோ சிமெண்ட், டால்மியா சிமெண்ட், தரணி சிமெண்ட் போன்ற பல்வேறு

2022 மே 5]

தொழிற்சாலைகள் அங்கு அமைந்திருக்கின்ற காரணத்தினால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கங்கை கொண்டு கடாரம் வென்ற மன்னன் ஆண்ட எங்கள் பூமியின் கோரிக்கையினை நிச்சயமாக பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். அது பரிசீலனையில் மட்டுமல்லாமல், அதனை நிறைவேற்றியும் தருவார் என்ற நம்பிக்கையோடு, ஆண்டிமடம் ஒன்றியம், கூவத்தூரில் ஏற்கெனவே ஒரு தொழிற்பயிற்சி நிலையம் 2007 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்த மாண்புமிகு அண்ணன் திரு. ராசா அவர்களாலும், அன்றைக்கு ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களின் முயற்சியாலும் துவங்கப்பட்டது. அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில் கடந்த 10 ஆண்டுகளாக, கடந்த ஆட்சிக் காலத்தில் எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து தராத காரணத்தினால், இப்போது 4 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடம், நிர்வாக அலுவலகம், ஆண்கள் மற்றும் பெண்கள் பயன்படுத்தக்கூடிய கழிப்பறை, சுற்றுச் சுவர், தண்ணீர் வசதி, சாலை வசதி இவைகள் எதுவுமே இல்லை. எனவே, இவை எல்லாவற்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் இருக்கக்கூடிய*

[2022 மே 5

ஆண்டிமடம் ஒன்றியம், கூவத்தூர் பகுதியில் இருக்கக்கூடிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதுபோன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக, குறிப்பாக, கூடுதல் கட்டடம், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, சாலை வசதி, மின்சார வசதி, பாதுகாப்பு வசதி இவைகள் மட்டுமல்லாமல், தற்போது இருக்கின்ற நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய தரத்திற்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஆண்டு 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு 2,877 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, நிர்மாணம் செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள். அதில் ஜெயங்கொண்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற அரசு தொழிற்பயிற்சி நிலையமும் எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவாகப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) சுருளி ஆறு மற்றும் முல்லைப் பெரியாறிலிருந்து கம்பம் தொகுதி, சின்னமனூர் ஒன்றியத்திற்கு பாசன வசதி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல் (குறுக்கீடு) சொல்லுங்கள். திரு. நா. இராமகிருஷ்ணன், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. அருண்மொழிதேவன், இருங்கள்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டமாந்துறையில் சுருளியாறு மற்றும் முல்லைப் பெரியாற்றிலிருந்து 144 மில்லியன் கன அடி தண்ணீரை கம்பம்